




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 14 | 4 Pages | 14.8.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 14 | 4 பக்கங்கள் | 14.8.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**

**நாமங் கெடக்கெடு நோய்**

**விளக்கம்:**

**விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக் குற்றங்கள் மூன்றனுடைய பெயரும் கெடுமாறு ஒழுகினால் துன்பங்கள் வராமற் கெடும்.**

# அடிமைத்தனம் பற்றி எடப்பாடி பழனிசாமி பேசலாமா? முதல்வர் மு.க.ஸ்டாலின் சாடல்

சென்னை ஆக. 14

சென்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் திமுக தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது,

கம்யூனிஸ்டுகள் மீது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு திடீர் பாசம் வந்துள்ளது.

கம்யூனிஸ்டுகள் திமுகவுக்கு அடிமையாக இருபதாக அவர் கூறுகிறார்.

நாட்டில் யார் யார் எதைப்பேசவெண்டும் என்பதே



இல்லை. அடிமைத்தனம் பற்றி எடப்பாடி பழனிசாமி பேசலாமா? இங்கே யாருக்கும் யாரும் அடிமையில்லை. கம்யூனிஸ்டுகள் குறைகளை சுட்டிக்காட்ட தவறியதுமில்லை. அதை நாங்கள் ஒருபோதும் புறக்கணித்ததுமில்லை.

எது தோழமை சுட்டுவது, எது அவதூறாக பேசுவது என்பது எங்களுக்கு தெரியும்.

திமுக, கம்யூனிஸ்டுகள் கூட்டணி என்பது தேர்தல் கூட்டணி அல்ல கொள்கை கூட்டணி

இவ்வாறு அவர் பேசினார்.

## சஹாரா குழும பணமோசடி வழக்கு; 9 இடங்களில் அமலாக்க துறை சோதனை



புதுடெல்லி, ஆக. 14

உத்தர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மராட்டியம்ஆகியமாநிலங்களில்9இடங்களில், சஹாரா குழுமத்திற்கு எதிரான பணமோசடி வழக்கு தொடர்பாக அமலாக்க துறை இன்று சோதனையில் ஈடுபட்டது.

சஹாரா குழுமம், 300க்கும் மேற்பட்ட குற்றங்களில் ஈடுபட்டு உள்ளது என்ற குற்றச்சாட்டு தொடர்பாக, பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் 500க்கும் மேற்பட்ட எப்.ஐ.ஆர். பதிவுகள் போடப்பட்டு உள்ளன. வாடிக்கையாளர்களை, முதிர்வுகாலம் முடிந்தும் தொகையை திருப்பி தராமல், வைப்புநிதி திட்டத்தில் மீண்டும் மீண்டும் பணம் போட செய்து பெரிய அளவில் மோசடி நடந்துள்ளது.

பெரிய தொகை மற்றும் கமிஷன் திரும்ப கிடைக்கும் என கூறி வைப்பு நிதியாளர்கள் மற்றும் ஏஜெண்டுகளுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டு உள்ளது. ஆனால், திருப்பி தராமல் மோசடி நடந்துள்ளது. திருப்பி கொடுப்பதற்கு போதிய பணம் இல்லாதபோதும், புதிய வைப்பு நிதிகளை சேகரிக்கும் பணியில் அந்த குழுமம் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக, பினாமி சொத்துகளை உருவாக்கியும் மற்றும் தனிப்பட்ட செலவுகளில் ஈடுபட்டும் பணமோசடி நடந்து உள்ளது. இது தொடர்பாக ஒடிசா, பீகார் மற்றும் ராஜஸ்தானில் போலீசார் எப்.ஐ.ஆர். பதிவு செய்துள்ளனர். அதன் அடிப்படையில் அமலாக்க துறை இன்று விசாரணையை தொடங்கியுள்ளது. இந்த வழக்கில் 707 ஏக்கர் பரப்பிலான ரூ.1,460 கோடி மதிப்பிலான நிலம், 1,023 ஏக்கர் பரப்பிலான மற்றும் ரூ.1,538 கோடி மதிப்பிலான மற்றொரு நிலம் ஆகியவற்றை முடக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன என அமலாக்க துறை தெரிவித்து உள்ளது.


## திண்டுக்கல்லில் கீழ்நிலை தண்ணீர் தொட்டியில் பெயிண்ட் அடித்த 2 பெயிண்டர்கள் மயக்கம் மருத்துவமனையில் அனுமதி



திண்டுக்கல், நாராயண பிள்ளை தோட்டம் 3வது தெரு பகுதியை சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் வீட்டின் 10 அடி ஆழமுள்ள தண்ணீர் கீழ்நிலை தொட்டிக்கு பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்த தினேஷ்குமார்(27), நாகமுனி(29) ஆகிய இருவரும் திடீரென மயங்கி விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் தண்ணீரை பீச்சி அடித்து இருவரையும் மீட்டனர். இருவரும் மயக்கமான நிலையில் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். மேற்படி சம்பவம் குறித்து நகர் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் வினோதா தலைமையிலான போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

## இளம்பெண் இறந்த வழக்கில் திடீர் திருப்பம்: வீட்டுக்கு அழைத்து சென்று உல்லாசம் காதலன் கைது



திருவனந்தபுரம், ஆக. 14

எர்ணாகுளம் மாவட்டம் கோதமங்கலம் பகுதியை சேர்ந்தவர் 21 வயது இளம்பெண். இவர், அங்கமாலி அருகே உள்ள ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படித்து வந்தார். இதற்கிடையே அவருக்கும், கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் ஊழியராக பணிபுரிந்துவரும்பரவூர்பகுதியை சேர்ந்த ரமீஸ் என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இது காதலாக மாறியது. பின்னர் அவர்கள் நெருங்கி பழகி வந்தனர். சமீபத்தில் இளம்பெண்ணை ரமீஸ் தனது வீட்டுக்கு அழைத்து சென்று பேசியதாக கூறப்படுகிறது. அதன் பின்னர் மனமுடைந்த இளம்பெண் கடந்த 9ந் தேதி தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். தகவல் அறிந்த கோதமங்கலம் போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக எர்ணாகுளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீசார் தற்கொலை என வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். மேலும் இளம்பெண்ணின் வீட்டில் இருந்து, அவர் எழுதிய கடிதம் சிக்கியது. அதை போலீசார் கைப்பற்றினர். அதில், என்னை காதலன் ரமீஸ் வீட்டுக்கு அழைத்து சென்று உல்லாசம் அனுபவித்தார். மேலும் மதம் மாற கட்டாயப்படுத்தியதால், நான் மனமுடைந்து தற்கொலை செய்து கொள்கிறேன் என்று கூறப்பட்டு உள்ளது. இதுகுறித்து இளம்பெண்ணின் தாய் தனது மகள் சாவுக்கு ரமீஸ் தான் காரணம் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் தற்கொலைக்குதூண்டியது, பாலியல் வன்கொடுமை ஆகிய 2 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, ரமீஸை போலீசார் கைது செய்தனர்.

## 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற வேண்டும்: தூத்துக்குடியில் மகிளா காங்கிரஸ் தலைவி பேட்டி



தூத்துக்குடி ஆக. 14

தூத்துக்குடி மாநகர மாவட்ட மகிளா காங்கிரஸ் புதிய நிர்வாகிகளுக்கு பதவி வழங்கும் விழா தூத்துக்குடி, எட்டயபுரம் ரோட்டில் உள்ள சிட்டி டவரில் வைத்து நடைபெற்றது. இந்த விழாவுக்கு மாநகர மாவட்ட மகிளா காங்கிரஸ் மாவட்ட தலைவி ப்ரீத்தி வினோத் தலைமை வகித்தார். இதில் சிறப்பு விருந்தினராக மாநில மகிளா காங்கிரஸ் தலைவி ஹசினா சையத் கலந்து கொண்டு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள மகிளா காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு நியமன கடிதங்களை வழங்கி பேசினார்.

அதனை தொடர்ந்து, மாநில மகிளா காங்கிரஸ் தலைவி ஹசினா சையத் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியின்போது கூறியதாவது:

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி பெண்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. ஆனால் மத்தியில் ஆளும் பாஜக அரசு மக்களை ஏமாற்றி வருகிறது. பெண்களுக்கு மத்தியில் 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டு தற்போது வரை அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே உடனடியாக பெண்களுக்கான மசோதாவை நடைமுறைப்படுத்த வேண்டும்.

6.5 லட்சம் வாக்காளர்கள் போலி வாக்காளர்களாக உள்ளனர். மேலும் தமிழகத்தில் போலி வாக்காளர்கள் ஊடுருவி வருவதை தடுக்க தமிழக காங்கிரஸ் கமிட்டி மற்றும் மகிளா காங்கிரஸ் கமிட்டியினர் அடையாளம் கண்டு தடுக்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக நடந்த நிகழ்ச்சிக்கு துணைத் தலைவர்கள் அன்னதாசி மரிய கிரேஸர், எலிசபெத், பொதுச் செயலாளர்கள் மீனாட்சி சுந்தரி, பிளஸ்சி ப்ளோரினா, செயலாளர்கள் சேஸி சுபாஷினி, வள்ளி மனோகரன், ரீனா மரிய அந்தோணி, துணை செயலாளர்கள் மதிமலர் சிந்தா, அக்ஷிலியா, முருகேஸ்வரி, சமூக ஊடகப் பொறுப்பாளர் அன்னமரியா, பொருளாளர் சீத்தாலட்சுமி, மாநில பொதுக் குழு உறுப்பினர் கஸ்தூரி வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் மண்டல தலைவர்கள் சேகர், ராஜன், ஐசன் சில்வா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் சண்முகம், மாநகர மாவட்ட தலைவர் முரளிதரன், முன்னாள் எம்.எல்.ஏ. சுடலையாண்டி, மாநகராட்சி கவுன்சிலர்கள் சந்திரபோஸ், எடிண்டா, கற்பககனி சேகர், மற்றும் ஐஎன்டியுசி மாநில அமைப்பு செயலாளர் ராஜ் மற்றும் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## வசதியானவர்களை இடஒதுக்கீடு பலனில் இருந்து நீக்கக் கோரி மனு: சுப்ரீம் கோர்ட்டு விசாரணைக்கு ஏற்பு

புதுடெல்லி, ஆக. 14

பட்டியலின, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் உள்ள வசதி படைத்தவர்களை இட ஒதுக்கீட்டுப் பலன்களிலிருந்து விலக்கக்கோரும் மனுவை சுப்ரீம் கோர்ட்டு விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

இதுபோன்ற நடைமுறையானது, இட ஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைக்கிறது. எனவே அரசு வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டிற்கான பலன்கள்உண்மையானஏழைஎளியமக்களைச்சென்றடைவதைஉறுதிசெய்யும் வகையில், கொள்கைகளை வகுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் ஜாய்மல்யா பாக்சி அடங்கிய அமர்வு முன்பு இந்த மனு விசாரணைக்கு வந்தது. மனுதாரர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரம் குறித்து விரிவாக விசாரிக்க முடிவு செய்தனர். இது தொடர்பாக வரும் அக்டோபர் 10ம் தேதிக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

மேலும், மனுவின் விசாரணையின்போது கருத்து தெரிவித்த நீதிபதி சூர்யகாந்த், 'பட்டியலின, பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தபலர், இடஒதுக்கீட்டின்மூலம்உயர்அரசுப்பதவிகளைஅடைந்துள்ளனர்.

அவர்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முன்னேறியுள்ளனர். அவர்களால் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியையும் வசதிகளையும் வழங்க முடிகிறது. இத்தகைய சூழலில், வசதி படைத்த அவர்கள், தங்கள் சமூகத்தில் உள்ள வறுமையில் வாடும் மற்றவர்களின் வாய்ப்புகளைப் பறித்து, இடஒதுக்கீட்டின் பலன்களைத் தொடர்ந்து அனுபவிப்பது சரியா? என்பது குறித்து பரிசீலிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது' என்று குறிப்பிட்டார்.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு முக்கியத் தீர்ப்பை வழங்கியது. அதில், இட ஒதுக்கீட்டின் பலன்கள் மிகவும் பின்தங்கியவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, பட்டியலின சமூகத்தினரை மாநில அரசுகள் துணை வகைப்படுத்தலாம் என்று கூறியது.

மேலும், பட்டியலின சமூகத்தில் உள்ள வசதி படைத்தோர் பட்டியலை (கிரிமிலேயர்) இட ஒதுக்கீட்டுப் பலன்களிலிருந்து விலக்குவதற்கான உரிய விதிகளை வகுக்குமாறும் அப்போது சுப்ரீம் கோர்ட்டு அறிவுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் பட்டியலின, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டவகுப்பினரில்உள்ளவசதிபடைத்தவர்களைஇடஒதுக்கீட்டுப் பலன்களிலிருந்து விலக்கக்கோரும் மனுவை சுப்ரீம் கோர்ட்டு விசாரணைக்கு ஏற்றுக்கொண்டதால், இந்த விவகாரம் குறித்த விவாதம் தொடங்கியுள்ளது.

## பள்ளி மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி




பூரணாங்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் பூரணாங்குப்பம் தனசுந்தராம்பாள் சாரிட்டபிள் சொசைட்டி சார்பாக மாணவர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி 12வது ஆண்டாக இன்று (138 25) காலை நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் திரு சிரில் ஜியோ போர்ட் லூயிஸ் அவர்கள் தலைமையில் ஆசிரியர் திரு .ஆனந்தன் அவர்கள் வரவேற்றார் நிகழ்ச்சியில் தனசுந்தராம்பாள் சாரிடபுள் சொசைட்டி நிறுவனர் திரு. பூரணாங்குப்பம் பனை ஆனந்தன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அடை அட்டை வழங்கினார், சிறப்பு அழைப்பாக முன்னாள் பஞ்சாயத்து துணைத் தலைவர் திருவேடம் அவர்கள் கலந்து கொண்டார். முடிவில் ஆசிரியர் திரு வடிவேலு அவர்கள் நன்றி கூறினார்கள் பள்ளியில் பயிலும் 200 மாணவர்களுக்கும் தனியார் பள்ளிக்கு நிகராக அடையாள அட்டை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆசிரிய ர்கள் மாணவர்கள் பங்கு பெற்று சிறப்பு செய்தனர்

## சிறந்த பேரூராட்சியாக நத்தம் பேரூராட்சிக்கு விருது வழங்கப்பட்டது


13 கருப்பொருளை மையமாக கொண்டு சிறந்த மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன.

தமிழகத்தில் சிறப்பாக செயல்படும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தின்போது முதலமைச்சர் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் 2025ஆம் ஆண்டுக்கான சிறந்த பேரூராட்சிகள் 3 தேர்வு செய்யப்பட்டதில் நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சியும் தேர்வு செய்யப்பட்டு வரும் 15ஆம் தேதி சுதந்திர தினத்தன்று முதல்வர் கையால் விருது வழங்கப்பட உள்ளது



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டம் மாழியம்பட்டு கிராமத்தில் உள்ள ஏரிக்கரையில் இரண்டு குடும்பங்கள் தமிழ்நாடு அரசு வழங்கும் அடிப்படை உரிமையான ஓட்டு உரிமை ரேஷன் கார்டு ஆதார் கார்டுவழங்கப்படாமல் தாங்கள் குழந்தைகள் பள்ளிக்கு செல்ல முடியாமலும் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகள் பெற முடியாமலும் அப்பகுதியில் கேட்பாரின்றி அகதிகளாக வசித்துவருகின்றனர் இச்சம்பம் தொடர்பாக அப்பகுதி அதிகாரிகள் துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு தமிழ்நாடு அரசு மூலம் ஆவணங்களை பெற்று குழந்தைகளை பள்ளிக்கு செல்வதற்கும் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகள் பெறுவதற்கும் அதிகாரிகளின் பார்வைக்கு சமர்ப்பணமாக சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்

# சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கு: செந்தில் பாலாஜி மனு தள்ளுபடி



சென்னை, ஆக. 14

போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடி செய்த வழக்கு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கின் அடிப்படையில் சட்ட விரோத பணப்பரிமாற்றம் செய்ததாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக் குமார் உள்ளிட்டோருக்கு எதிராக அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கில் சாட்சி விசாரணை நடைப்பெற்று வரும் நிலையில், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உதவியாளருமான கார்த்திகேயன் என்பவர், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ். கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது உதவியாளர்கார்த்திகேயன்தரப்பில், போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாகக் கூறி மோசடி செய்ததாக எம்பி, எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கு விசாரணை முடியும் வரை, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜி உள்ளிட்டோர்மீதானசட்டவிரோத பணபரிமாற்ற வழக்கின் விசாரணையை தள்ளி வைக்க வேண்டும் தெரிவிக்கப்பட்டது. அமலாக்கத்துறை தரப்பில், விசாரணை பாதிக்கப்படும் என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து உத்தர விட்ட நீதிபதி கார்த்திகேயன், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தொடர்பான சிறப்பு நீதிமன்றத்தில் உள்ளவழக்கின்விசாரணை முடியும் வரை அமலாக்கத் துறை தொடர்ந்த வழக்கின் விசாரணையை தள்ளி வைக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்து உத்தர விட்டார்.

# தூத்துக்குடி பாலிடெக்னிக் கல்லூரியில் வெடித்தது பட்டாசு: காவல்துறை விளக்கம்




தூத்துக்குடி ஆக. 14

தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயின்று வருகின்றனர். அங்கு மெக்கானிக்கல் பிரிவில் முதலாம் ஆண்டு பயின்று வரும் ஒரு மாணவன் கல்லூரிக்கு நாட்டு வெடியை கொண்டு வந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவரது நண்பர்கள் அந்த வெடியின் திரியை இழுத்தபோது, அது பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதால்அருகில்இருந்த 2 மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்த மாணவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்துசென்றதூத்துக்குடி தென்பாகம் போலீசார் வெடி வெடித்தது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தூத்துக்குடியில் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் வெடித்தது பட்டாசுஎனமாவட்ட காவல்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதில், "சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் விரைந்து சென்று அங்கு சோதனை செய்ததில், அது ஒரு மாணவரால் கொண்டு வரப்பட்ட பட்டாசு வெடித்துள்ளது என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனவே இது சம்பந்தமாக விசாரணையில் உள்ள நிலையில், தவறான தகவல்களை யாரும் பரப்ப வேண்டாம்" என்று காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லையில் ஐ.டி. ஊழியர் கொலை; சுர்ஜித்தை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று சிபிசிஐடி விசாரணை



திருநெல்வேலி ஆக. 14

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலத்தை சேர்ந்த இளைஞர் கவின்குமார். இவர் சென்னையில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இதனிடையே, கவின்குமார் கடந்த மாதம் 27ம் தேதி நெல்லை பாளையங்கோட்டையில் படுகொலை செய்யப்பட்டார். காதல் விவகாரத்தில் காதலியின் சகோதரன் சுர்ஜித் என்பவர் கவின்குமாரை வெட்டிக்கொன்றார்.

இந்தசம்பவம்பெரும்பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் சுர்ஜித் போலீசில் சரணடைந்தார். கவின்குமார் காதலித்த இளம்பெண்ணின் பெற்றோரான போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தம்பதி சரவணன், கிருஷ்ணகுமாரி சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். இதில், இளம்பெண்ணின் தந்தை சரவணனையும் போலீசார் கைது செய்தனர்.

இதனிடையே, கவின்குமார்கொலைவழக்குகடந்த மாதம் 30ம் தேதி சிபிசிஐடி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சுர்ஜித் மற்றும் அவரது தந்தை சரவணனை சிபிசிஐடி போலீசார் 2 நாட்கள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், கவின்குமாரை கொலை செய்த சுர்ஜித்தை சிபிசிஐடி போலீசார் கொலை நடந்த இடத்திற்கு நேரில் அழைத்து சென்று விசாரணை நடத்தினர். கொலை நடந்த இடத்தில்வைத்து, கொலை நடந்தது எப்படி என்பது குறித்து சிபிசிஐடி போலீசாரிடம் சுர்ஜித் நடித்து காட்டினார். அதன் அடிப்படையில் சிபிசிஐடி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தூத்துக்குடியில் சாலை விபத்தில் பெண் சாவு




தூத்துக்குடி ஆக. 14

தூத்துக்குடி, மீனாட்சிபுரம் 2வது தெருவைச் சேர்ந்த பேச்சிமுத்து மனைவி முத்தரசி (வயது 48). இவரது மகள் ஐஸ்வர்யா(30), பேத்தி காயத்ரி(5) ஆகிய மூன்று பேரும் கடந்த 1ம் தேதி ஆறுமுகநேரியில் உள்ள உறவினர் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு மாலையில் தூத்துக்குடிக்கு சென்று கொண்டிருந்தனர்.

திருச்செந்தூர் ரோடு, முத்தையாபுரம் அருகே வரும் போது திடீரென இருசக்கர வாகனம் நிலை தடுமாறி சென்டர் மீடியனில் மோதியது. இதில் முத்தரசி, அவரது மகள்ஐஸ்வர்யா, பேத்தி காயத்ரி ஆகிய மூன்று பேரும் காயம் அடைந்தனர். பின்னர் மூன்று பேரும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி முத்தரசி இன்று காலை இறந்தார். இதுகுறித்து முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) ஜெயந்தி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# நாமக்கல்லில் கல்லூரி மாணவிக்கு பாலியல் வன்கொடுமை சிறப்பு எஸ்.ஐ. கைது



நாமக்கல், ஆக. 14

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை அருகே வாழவந்திநாடு காவல் நிலையத்தில் சிறப்பு எஸ்.ஐ.ஆக மோகன் குமார் (வயது 55) என்பவர் பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் எஸ்.எஸ்.ஐ மோகன் குமார் மீது கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் அளித்தார்.

இதையடுத்து நாமக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எஸ்.எஸ்.ஐ மோகன் குமார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதையடுத்து 19 வயது கல்லூரி மாணவிக்கு பாலியல் வன்கொடுமை செய்ததாக மோகன் குமாரை போலீசார் கைது செய்தனர்.

இது தொடர்பாக அவரிடம் போலீசார் விசாரணைநடத்திவருகிறார்கள்.

# தூத்துக்குடி: தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை ஆகஸ்ட் 31 வரை நீட்டிப்பு




தூத்துக்குடி ஆக. 14

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2025ம் ஆண்டில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி, வேப்பலோடை, திருச்செந்தூர், நாகலாபுரம் மற்றும் ஏரல் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும், அரசு உதவி பெறும் தனியார்தொழிற்பயிற்சிநிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திட 19.6.2025 முதல் நேரடி சேர்க்கை நடைபெற்று வந்த நிலையில் தற்போது கால அவகாசம் 31.8.2025 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை:

நேரடி சேர்க்கையில் சேர விரும்பும் மாணவர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையம், தூத்துக்குடி, வேப்பலோடை, திருச்செந்தூர், நாகலாபுரம், மற்றும் ஏரல் ஆகியவற்றிற்கு வருகை தந்து நேரடியாக சேர்ந்து கொள்ளலாம். மாநிலம் முழுவதும் உள்ள சேர்க்கை மையங்களின் பட்டியல் மற்றும் தொழிற்பிரிவுகள் விவரம் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு/ பத்தாம் வகுப்பு/ 2021ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பின்ஒன்பதாம்வகுப்பு மதிப்பெண் பட்டியல். நேரடி சேர்க்கையில் சேர விரும்புவோர்8ம்வகுப்பு/ பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் ஒரு நகல்களுடன் தூத்துக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் வருகை தர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசு வழங்கும் விலையில்லா உபகரணங்கள் வழங்கப்படுகிறது. அதன்படி மாதந்தோறும் உதவித்தொகை ரூ.750 கட்டணமில்லா பஸ் பாஸ், இலவச சைக்கிள், பாடப்புத்தகங்கள், வரைபடக் கருவிகள், சீருடை, காலணி, பயிற்சிக்குத் தேவையான விலையில்லா உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு இலவச உண்டி, உறைவிட வசதியும் உள்ளது. தகுதியுள்ள மாணவ மாணவியர்களுக்கு தமிழக அரசின் தமிழ்ப்புதல்வன் திட்டம் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்படும். எனவே இந்த அரிய வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பி.எட். மாணாக்கர் சேர்க்கை ஆணையை 13ம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் உயர்கல்வித் துறை அமைச்சர் தகவல்



சென்னை, ஆக. 14

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் 2025–26ஆம் கல்வியாண்டிற்கான பி.எட். மாணாக்கர் சேர்க்கை ஆணையை இணைய வழியில் 13.08.2025 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன்தெரிவித்துள்ளார்.


இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆண்டுகளில் பி.எட். (B.Ed.) மாணாக்கர் சேர்க்கை நேரடி கலந்தாய்வின் மூலம் நடைபெற்று வந்தது. இதனால் வெளியூர்களிலிருந்து மாணாக்கர் தங்களுடைய பெற்றோர்களுடன் சென்னைக்கு வந்து கலந்தாய்வில் கலந்து கொள்ளும் நிலை நேரிட்டது. இந்த சிரமங்களைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் 202526ஆம் கல்வியாண்டிற்கான பி.எட். மாணாக்கர் சேர்க்கை இணைய வழியில் நடத்திட முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, விண்ணப்பங்கள் 20.06.2025 முதல் 21.07.2025 வரை இணைய வழியில் பெறப்பட்டன. 559 மாணவர் 2,986 மாணவியர் என மொத்தம் 3,545 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பின்னர், 31.07.2025 அன்று தரவரிசை பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 7 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 900 இடங்களும் 14 அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் 1,140 இடங்கள் என 21 கல்வியியல் கல்லூரிகளில் 2,040 இடங்களும் உள்ளன.

இவ்விடங்களுக்கு மாணாக்கர் தாங்கள் விரும்பும் கல்லூரிகளைத் தேர்வு செய்ய இணைய வழியில் 04.08.2025 முதல் 09.08.2025 வரை வழிவகை செய்யப்பட்டது. நாளை(13.08.2025)காலை 10.00 மணியில் இருந்து மாணாக்கர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆணையை தங்கள் உள்நுழைவு (ID) மூலம் www.lwiase.ac.in என்ற இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பின்னர், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரியில் 14.08.2025 முதல் 19.08.2025 வரை சேர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், மாணாக்கர் சேர்க்கைக்கு தேவையான அனைத்து அசல் சான்றிதழ்களையும் உடன் எடுத்துச் செல்லவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். 20.08.2025 முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பி.எட். முதலாம் ஆண்டுவகுப்புகள்தொடங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை மாநகராட்சியில் சொத்துவரி முறைகேடு உதவி ஆணையர் கைது



மதுரை, ஆக. 14

மதுரை மாநகராட்சியில் நடந்த, ரூ.150கோடி ரூபாய் சொத்து வரி முறைகேடு தமிழக அரசியலில் அதிர்வலையை ஏற்படுத்தியது. முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவால் மாநகராட்சியின் ஆளுங்கட்சியை சேர்ந்த ஐந்து மண்டல தலைவர்கள், இரு நிலைக்குழு தலைவர்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

வழக்கில் ஏற்கனவே ஓய்வு பெற்ற உதவி கமிஷனர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். பில் கலெக்டர்கள் உட்பட 19 பேர், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டனர். அ.தி.மு.க., தொடர்ந்த வழக்கு அடிப்படையில், இம்முறைகேட்டை தற்போது மதுரை டி.ஐ.ஜி., அபினவ் குமார் தலைமையிலான குழு விசாரிக்கிறது.

இந்நிலையில், தூத்துக்குடியில் உதவி கமிஷனராக பணியாற்றி வரும் சுரேஷ்குமார் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர். முறைகேடு நடந்தகால கட்டத்தில் இவர் மதுரையில் பணியாற்றி உள்ளார். கைது செய்யப்பட்ட சுரேஷ் குமாரை, விசாரணைக்காக போலீசார்மதுரைஅழைத்து வருகின்றனர்.

இம்முறைகேட்டில் கைதான சொத்து வரி குழுத் தலைவர்விஜயலட்சுமியின் கணவர் கண்ணன் என்பவர் அளித்த போலீசில் அளித்த வாக்குமூலம் அடிப்படையில் சுரேஷ்குமார் கைது செய்யப்பட்டது தெரியவந்துள்ளது.

# வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேஷன் பொருட்களை வழங்கிய உதயநிதி ஸ்டாலின்




சென்னை, ஆக. 14

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும்முதல்அமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னை, தண்டையார் பேட்டை பகுதியில் மு.க.ஸ்டாலின் இன்று (12.8.2025) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு துணை முதல்அமைச்சர்உதயநிதிஸ்டாலின் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் முதல்அமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ரேஷன் பொருட்களை வழங்கும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேஷன் பொருட்களை வழங்கினார்.

சிறப்பு கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும், இத்திட்டத்தின்கீழ்சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் செயல்பட்டு வரும் 36 நியாய விலைக் கடைகளுக்குட்பட்ட 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட 2,467 குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்பங்களில் உள்ள 3,548 குடும்ப உறுப்பினர்களின் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மூடிய வாகனங்களில் மின்னணு எடைத்தராசு, e POS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாக தகுதியுள்ள பயனாளிகளின் இல்லத்திற்கே சென்று நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகம் செய்ய உள்ளனர்.என தெரிவிக்கப்பட்டுள்ளது .

# செப்7ம் தேதி முழு சந்திர கிரகணம்: சென்னையில் தெரியும்



சென்னை, ஆக. 14

சந்திர கிரகணம் என்பது சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும் போது ஏற்படுகிறது. பூமி, சூரிய ஒளியை சந்திரன் மேல் விழாமல் தடுப்பதால் சந்திரன் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். இதை ரத்த நிலவு என்றும் சொல்வார்கள். இந்தநிலையில், வருகிற செப்டம்பர் 7ந்தேதி முழு சந்திர கிரகணம் நிகழ உள்ளது. இதை சென்னையில் உள்ளவர்கள் வெறும் கண்களால் பார்க்கலாம்.

செப்டம்பர் 7ந்தேதி இரவு 8.58 மணிக்கு தொடங்கும் கிரகணம் 8ந் தேதி அதிகாலை 2.25 மணி வரை தெரியும். இதை எந்த வித கருவிகளும் இன்றி வெறும் கண்களாலேயே பார்க்கலாம். குறிப்பாக சென்னையில் உள்ளவர்கள் கிழக்கு நோக்கி வானத்தை பார்த்தாலே போதும் முழு சந்திர கிரகணத்தை பார்த்து ரசிக்கலாம்.

பூமியின் லேசான நிழலுக்குள் சந்திரன் நுழையும் கட்டத்தை பெனும்பிரல்என்றுஅழைக்கிறார்கள். அதில் தொடங்கி கிரகணம் மேலும் வளர்கிறது. இதை காண்பதற்கு மட்டும் தொலைநோக்கி தேவைப்படலாம். பூமியின் மைய இருண்ட பகுதியான அம்ப்ரா சந்திரனை மறைக்கத் தொடங்கி முழுமை அடையும் போது சந்திரன் சிவப்பு நிறத்தில் ஒளிரத் தொடங்கும்.

இரவு 11.41 மணிக்கு முழுமையான சந்திர கிரகணம் நிகழும். இரவு 9.57 மணி முதல் நள்ளிரவு 12.22 மணி வரை, ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அலாஸ்கா, தென் அமெரிக்காவின் கிழக்கு பகுதி மற்றும் உலகின் பெருங்கடல்கள் மற்றும் துருவப் பகுதிகள் முழுவதும் இந்த நிகழ்வு தெரியும்.

அடுத்த முழு சந்திர கிரகணம் 2026ம் ஆண்டு மார்ச் 3 அன்று நிகழ உள்ளது. ஆனால் அதை சரியாக பார்க்க முடியாது. அதன் ஒரு பகுதி மட்டுமே இந்தியாவில் தெரியும். ஏனென்றால் சந்திர கிரகணம் நிகழ்ந்து முடியும் நேரத்தில்தான் இங்கு நமக்கு சந்திரன் உதிக்கும். இவ்வாறு தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் முன்னாள் நிர்வாக இயக்குனர் சவுந்தரராஜ பெருமாள் கூறியுள்ளார்.

# திருநம்பியை சுயமரியாதை திருமணம் செய்த இளம்பெண்

சேலம், ஆக. 14

சேலம் மாவட்டம் அரிசி பாளையத்தை சேர்ந்தவர் துரைராஜ் மகள் இலக்கியா ஸ்ரீ (வயது 21) பட்டதாரி பெண் ஆவார். சேலம் மாவட்டம் செல்லத்தாம்பட்டியை சேர்ந்த சேகர் என்பவரின் மகன் கார்த்திக் திருநம்பி (வயது 21) என்பவரும் பள்ளி காலத்தில் இருந்தே நண்பர்களாக பழகி வந்துள்ளனர்.

இந்தநிலையில் இருவரும் ஒரேகல்லூரியில் இளங்கலை படித்து வந்தபோது இருவருக்கும் காதல் ஏற்பட்டது. இவர்களது காதல் விவகாரம் இரு வீட்டாருக்கும் தெரிய வந்ததும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அதைதொடர்ந்து இருவரும் நேற்று வீட்டை விட்டு வெளியேறி ஈரோடு மாவட்டம்கோபிசெட்டிபாளையத்தில்உள்ளசுயமரியாதை திருமண நிலையத்தில் தி.க.வின் கோபி மாவட்ட தலைவரும் வழக்கறிஞருமான சென்னியப்பன் முன்னிலையில் சுயமரியாதை திருமண உறுதி மொழியை எடுத்து முறைப்படி திருமணம் செய்து கொண்டனர். திருநம்பியை திருமணம் செய்த பட்டதாரி பெண்ணுக்கு அங்கிருந்தவர்கள் வாழ்த்து தெரிவித்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# தங்க செயின் வழிப்பறி செய்த வாலிபருக்கு 3 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி, ஆக. 14

திருநெல்வேலி மாவட்டம், கே.டி.சி.நகர் அருகே கடந்த 2020ம் ஆண்டு ஒரு பெண்ணிடம் தங்கச் செயினை வழிப்பறி செய்த வழக்கில், நேற்று திருநெல்வேலி மூன்றாவது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், குற்றவியல் நடுவர் ஜெய சங்கரகுமாரி தீர்ப்பு வழங்கினார்.

நீதிமன்றத்தில் வழக்கின் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் நேற்று வழக்கில் சம்பந்தப்பட்ட, பாளையங்கோட்டை, மனக்காவலம்பிள்ளைநகரை சேர்ந்த அஸ்வின் ஹரிஹரசுதன் (வயது 23) மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு, வழிப்பறி செய்த குற்றத்திற்காக மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.2,000 அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் திறம்பட சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த திருநெல்வேலி ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி. ரகுபதிராஜா, போலீஸ் இன்ஸ்பெக்டர் சசிகுமார் மற்றும் தாலுகா காவல் நிலைய காவல் அதிகாரிகள், காவலர்கள், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் ஏஞ்சல் செல்வராணி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# மகளை கொன்று இறுதிச்சடங்கு செய்துவிட்டு தந்தை தற்கொலை: பரபரப்பு தகவல்கள்




திண்டுக்கல், ஆக. 13

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள கணக்கன்பட்டியை சேர்ந்தவர் பழனியப்பன் (வயது 55). கட்டிட தொழிலாளி. இவருடைய மனைவி விஜயா (50). இவர்களுக்கு கார்த்திகா, தனலட்சுமி (23) என்ற 2 மகள்களும், நல்லசாமி என்ற மகனும் உள்ளனர். இதில் கார்த்திகா திருமணமாகி வெளியூரில் வசிக்கிறார். நல்லசாமிக்கும் திருமணமாகி விட்டது.

தனலட்சுமிக்கு (23) திருமணம் ஆகாததால் பெற்றோருடன் வசித்து வந்தார். தனலட்சுமிக்கு திருமணத்துக்காக வரன் பார்த்து வந்தனர். ஆனால் அவரது உடல்நிலை பாதிப்பால் திருமண வரன் கைகூடவில்லை என்று தெரிகிறது. தனது மகளின் உடல்நிலை பாதிப்பு, திருமண தடை போன்றவற்றால் பழனியப்பன் சில நாட்களாக மனமுடைந்து காணப்பட்டார்.

இந்த நிலையில், கடந்த 9ந்தேதி விஜயா தனது மகன் நல்லசிவத்துடன் சாமி தரிசனம் செய்வதற்காக திருச்செந்தூர் சென்றுவிட்டார். வீட்டில் பழனியப்பன், அவரது மகள் தனலட்சுமி மட்டும் இருந்தனர். இதற்கிடையே திருச்செந்தூருக்கு சென்ற விஜயா, தனது கணவரின் செல்போனுக்கு நேற்று முன்தினம் அழைத்தார். ஆனால் பலமுறை தொடர்பு கொண்டும் செல்போனை யாரும் எடுக்கவில்லை.

இதனால் சந்தேகமடைந்த அவர், உடனடியாக கணக்கன்பட்டியில் உள்ள உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து உறவினர்கள், பழனியப்பன் வீட்டுக்கு வந்தனர். ஆனால் வீடு உள் பக்கமாக பூட்டியிருந்தது. கதவை தட்டி பார்த்தும் திறக்காததால் ஆயக்குடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் வந்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, பழனியப்பன் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாக கிடந்தார். மேலும் தனலட்சுமியும் இறந்த நிலையில் இருந்தார்.

ஆனால் தனலட்சுமிக்கு இறுதிச் சடங்கு செய்து மாலை போடப்பட்டு இருந்தது. இதனைக்கண்ட போலீசார், உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். 2 பேரின் உடல்களை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக பழனி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு நேற்று பிரேத பரிசோதனை நடந்தது. அதன் முடிவில், தனலட்சுமி கழுத்தில் கயிற்றால் இறுக்கி கொலை செய்யப்பட்டதும், பழனியப்பன் தற்கொலை செய்ததும் தெரியவந்தது.

இதுபற்றி போலீசார் கூறும்போது, "தனலட்சுமிக்கு உடல் நிலை பாதிப்பு மற்றும் திருமணம் தடைபட்டு வந்ததை நினைத்து சில நாட்களாகவே பழனியப்பன் மனமுடைந்து இருந்தார். எனவே மகள் கஷ்டப்படுவதை பார்த்து வேதனை அடைந்த அவர், தனலட்சுமியை கொன்றுவிட்டு தற்கொலை செய்ய முடிவெடுத்தார்.

இதற்காக மனைவி, மகன் குடும்பத்தினரை கோவிலுக்கு அனுப்பி வைத்தார். பின்பு மனதை கல்லாக்கிக் கொண்டு தனலட்சுமியை கயிற்றால் இறுக்கி கொலை செய்தார். அவர் இறந்த பின்பு அவருக்கு புதிய பட்டுசேலை போர்த்தி, பத்திகூடம் பற்ற வைத்து நெற்றியில் சந்தனம், குங்குமம் திருநீறு பூசி இறுதிச்சடங்கு செய்துள்ளார். பின்பு மகளை கொலை செய்த அதே கயிற்றால் தூக்குப்போட்டு அவரும் தற்கொலை செய்துள்ளார்." என்று தெரிவித்தனர். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதினால் அறிவு எப்படி வளரும்? அமைச்சர் கேள்வி



திருச்சி, ஆக. 13

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் திருச்சி மண்டலம் மூலம் திருச்சி மாநகரின் துவாக்குடி, கே.கே.நகர், ஸ்ரீரங்கம், விமான நிலையம் உள்ளிட்ட வழித்தடங்களில் நேற்று புதிய தாழ்தள சொகுசு பஸ் சேவையை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

அப்போது அவரிடம், சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் 9ம் வகுப்பு மாணவர்கள் புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதலாம் என்ற புதிய கல்விக் கொள்கை அறிவிப்பு பற்றி நிருபர்கள் கேட்டதற்கு, புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதினால் அறிவை எப்படி வளர்க்க முடியும்? என்று தெரிவித்தார்.

மத்திய இடைநிலை கல்வி வாரியம் என்று கூறப்படும் சி.பி.எஸ்.இ. நிர்வாகத்தின் கீழ் நாடு முழுவதும் ஏராளமான பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. சி.பி.எஸ்.இ. பாடத்திட்ட மாணவமாணவிகளுக்கு ஏற்றவாறு பாடத்திட்ட வடிவமைப்பு அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடத்திட்டங்களும் அதில் இணைக்கப்படுகின்றன. சில தேவையற்ற பாடக்குறிப்புகள் எடுக்கப்படும்போது அது சர்ச்சையாகும் சூழலும் ஏற்படுகிறது. இதேபோல் மாணவர்களின் தேர்வு சுமையை குறைக்கவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதில் ஒரு பகுதியாக சி.பி.எஸ்.இ. 10ம் வகுப்பு மாணவர்கள் ஒரு கல்வி ஆண்டில் இரண்டு முறை அதாவது, ஆண்டின் பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் தேர்வு எழுத வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது.

அந்த இரண்டு தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை இறுதி முடிவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இது மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்க உதவும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதன் தொடர்ச்சியாக தற்போது 9ம் வகுப்பு மாணவர்களுக்கும் தேர்வு நடைமுறையில் சில மாற்றங்களை சி.பி.எஸ்.இ. நிர்வாகம் கொண்டுவந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. அந்தவகையில், 9ம் வகுப்பில் திறந்த புத்தக மதிப்பீடுகளை ஒருங்கிணைக்கும் புதிய திட்டத்திற்கு சி.பி.எஸ்.இ. வாரியத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் நிர்வாகக்குழு ஒப்புதல் அளித்து இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த நடைமுறையின்படி ஒவ்வொரு பருவத்திலும் முக்கிய பாடங்களான மொழிப்பாடம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்து தேர்வுகளை புத்தகங்களை பார்த்து எழுத முடியும். இந்த புதிய நடைமுறை திறன் அடிப்படையிலான கற்றல் மற்றும் அதனை ஊக்குவிப்பது, மனப்பாடம் செய்வதை குறைப்பது போன்ற நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டு இருப்பதாகவும், 202627ம் கல்வியாண்டில் இருந்து நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் சி.பி.எஸ்.இ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 2வது நாளாக வேலைநிறுத்தம்



ராமநாதபுரம் ஆக. 13

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் இருந்து 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்து வருகின்றனர். அந்த வகையில் கடந்த 55 நாட்களில் மட்டும் 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம், வவுனியா சிறைகளில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

2 நாட்களுக்கு முன்புகூட ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 7 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்ததுடன், அவர்களது விசைப்படகையும் பறிமுதல் செய்தது.

ராமேசுவரம், பாம்பன் உள்பட அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், பாரம்பரிய கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையின் எந்த பிரச்சினையும் இன்றி மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முதல் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கினர்.

இதனால் ராமேசுவரம் துறைமுக கடல் பகுதியில் 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டன.

இந்நிலையில் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் இரண்டாவது நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தசூழலில் இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் தங்கச்சிமடம் வலசை பஸ் நிறுத்தம் அருகே அனைத்து விசைப்படகு மீனவர்கள் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், சுதந்திர தினத்தன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருப்பது, 19ந்தேதி ரெயில் மறியல் நடத்துவது என மீனவர்கள் முடிவெடுத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் மக்கள் விரும்பும் கூட்டணியை அமைப்போம் பிரேமலதா விஜயகாந்த்



மேட்டூர், ஆக. 13

'உள்ளம் தேடி, இல்லம் நாடி' என்ற பெயரில் விஜயகாந்த் ரத யாத்திரை நேற்று மாலை சேலம் மாவட்டம் மேட்டூர் மாதா கோவில் பாதை முன்பு தொடங்கியது.

இதில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கலந்து கொண்டு ரத யாத்திரையை தொடங்கி வைத்தார். பின்னர் அங்கு பிரேமலதா பேசியதாவது:

இங்கு வந்திருக்கும் ஒவ்வொரு தொண்டர் உருவத்திலும் கேப்டனை பார்க்கிறேன். இந்த கேப்டன் ரதம் இலங்கை வாழ் தமிழரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. விஜயகாந்த் ஆலயத்துக்கு தமிழகம் மட்டுமின்றி சிங்கப்பூர், மலேசியா, கனடா போன்ற வெளிநாடுகளில் இருந்து ஏராளமானவர்கள் வந்து பார்வையிட்டு செல்கின்றனர். தன்னுடைய பிறந்த நாளை வறுமை ஒழிப்பு தினமாக அறிவித்தவர் விஜயகாந்த்.

அவர் தனக்கென்று எதுவும்செய்து கொள்ளாமல், ஏழை, எளிய மக்களுக்கு இயன்ற உதவிகளையும், நல உதவிகளையும் வழங்கினார். அவருடைய கொள்கை, கோட்பாடுகளை வழி நடத்த எங்களை விட்டுச்சென்றுள்ளார். எனவே வருகிற சட்டசபை தேர்தலில் கேப்டனின் தே.மு.தி.க. கட்சி வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய வேண்டும். 2026 சட்டசபை தேர்தலில் மக்கள் விரும்பும் கூட்டணியை அமைப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# 6 பேர் கடத்தியதாக நாடகமாடிய பிளஸ்2 மாணவியால் பரபரப்பு

சிவகங்கை, ஆக. 13

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றில் படித்துவரும் 17 வயது பிளஸ்2 மாணவி, நேற்று காலையில் தன்னுடைய சகோதரருடன் மோட்டார் சைக்கிளில் பள்ளிக்கு வந்தார். அவரை பள்ளிக்கூடம் அருகே இறக்கிவிட்டு சகோதரர் சென்றார். ஆனால், மாணவி பள்ளிக்கு செல்லவில்லை.

இதற்கிடையில் அந்த மாணவி சிவகங்கையில் இருந்து தன்னுடைய தோழி ஒருவருக்கு போன் செய்து தன்னை 6 பேர் கொண்ட கும்பல் கடத்தியதாகவும், தற்போது அவர்களிடம் இருந்து தப்பி சிவகங்கை பஸ் நிலையத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் பதறிய தோழி, இதுகுறித்து மாணவியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தார்.

பின்னர் மாணவியை மீட்டு சிவகங்கை மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். மாணவி கடத்தப்பட்டதாக தகவல் பரவியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்ததும் மானாமதுரை போலீசார் பள்ளிக்கூடம் பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அதில், அந்த மாணவியை அவரது சகோதரர் மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்து பள்ளி அருகே இறக்கி விடுவதும்,. சகோதரர் சென்ற பின்னர் அந்த மாணவி அந்த வழியே வந்த ஒரு தனியார் பஸ்சில் ஏறி சென்றதும் பதிவாகி இருந்தது. இதனால் அந்த மாணவி கடத்தப்பட்டதாக நாடகமாடியதை போலீசார் உறுதி செய்தனர்.

இதைத் தொடர்ந்து அந்த மாணவியை மானாமதுரை அனைத்து மகளிர் போலீசில் ஒப்படைத்தனர். எதற்காக மாணவி அவ்வாறு கூறினார்? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். 6 பேர் கடத்தியதாக பிளஸ்2 மாணவி நாடகமாடிய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# ஒருவரை ஒருவர் கத்தியால் தாக்கி தகராறு: தடுத்து நிறுத்திய எஸ்.ஐ.க்கு தூத்துக்குடி எஸ்.பி. பாராட்டு




தூத்துக்குடி ஆக. 14

தூத்துக்குடி, தென்பாகம் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் தரணியா நேற்று, திருச்செந்தூர் ரோட்டில் உள்ள ஒரு தனியார் மஹால் அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அங்குள்ள ஒரு டீக்கடை முன்பாக 2 பேர் ஒருவரை ஒருவர் கத்தியால் தாக்கிக் கொண்டிருந்தனர். இதனைக் கண்ட மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் உடனடியாக அவர்களை தடுத்து நிறுத்தி அசம்பாவிதம் நடைபெறாமல் தடுத்தும், மேலும் காயம்பட்ட 2 பேரையும் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் முதலுதவி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தும் துரிதமாக செயல்பட்டார்.

மேலும் இச்சம்பவம் குறித்து தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேற்சொன்ன சம்பவத்தில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் விரைந்து செயல்பட்டு அசம்பாவிதத்தை தடுத்து நிறுத்தியும், காயம் பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தும் சிறப்பாக செயல்பட்ட சப் இன்ஸ்பெக்டர் தரணியாவை நேற்று மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

# ஐ.பி.எஸ். அதிகாரிக்கு எதிரான குற்றச்சாட்டு; ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவு



சென்னை. ஆக. 13

ஐ.பி.எஸ். அதிகாரி செல்வ நாகரத்தினத்துக்கு எதிராக டி.ஜி.பி.யிடம் இளம் பெண் ஒருவர் கடந்த 2019ம் ஆண்டு புகார் அளித்தார். அதில், ''இன்ஸ்டாகிராம் மூலம் ஐ.பி.எஸ். அதிகாரி செல்வ நாகரத்தினம் என்னுடன் பழகி திருமணம் செய்துகொள்வதாக கூறி உடல் ரீதியாக உறவில் இருந்தார். பின்னர் என்னிடம்பேசுவதைநிறுத்தினார். இதுகுறித்து கேட்டபோது துப்பாக்கியால் சுட்டு விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்'' என்று கூறியிருந்தார்.

இதுகுறித்து செல்வ நாகரத்தினத்துக்கு டி.ஜி.பி. குற்றச்சாட்டு குறிப்பாணை அனுப்பினார். இதை எதிர்த்து மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தில் அவர் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம் குறிப்பாணையை ரத்து செய்து, புதிதாக குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கலாம் என்று உத்தரவிட்டது.

இதன்படி அனுப்பப்பட்ட புதிய குற்றச்சாட்டு குறிப்பாணையை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் செல்வ நாகரத்தினம் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ், என்.செந்தில்குமார் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்த வழக்கின் இறுதி விசாரணையை வருகிற அக்டோபர் 8ந்தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதுவரை இந்த குற்றச்சாட்டு குறிப்பாணை தற்போதைய நிலையே தொடரவேண்டும் (தடை) என்று மனுதாரர் தரப்பில் கோரிக்கை விடுத்தார். இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், இதுகுறித்து இறுதி கட்ட விசாணையின்போது முடிவு செய்யப்படும் என்று உத்தரவிட்டனர்.

# மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணியின் கணவர் கைது



மதுரை, ஆக. 14

மதுரை மாநகராட்சியில் நடந்த, ரூ.150கோடி ரூபாய் சொத்து வரி முறைகேடு தமிழக அரசியலில் அதிர்வலையை ஏற்படுத்தியது. முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவால் மாநகராட்சியின் ஆளுங்கட்சியை சேர்ந்த ஐந்து மண்டல தலைவர்கள், இரு நிலைக்குழு தலைவர்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

வழக்கில் ஏற்கனவே ஓய்வு பெற்ற உதவி கமிஷனர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். பில் கலெக்டர்கள் உட்பட 19 பேர், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டனர். அ.தி.மு.க., தொடர்ந்த வழக்கு அடிப்படையில், இம்முறைகேட்டை தற்போது மதுரை டி.ஐ.ஜி., அபினவ் குமார் தலைமையிலான குழு விசாரிக்கிறது.

இந்நிலையில், தூத்துக்குடியில் உதவி கமிஷனராக பணியாற்றி வரும் சுரேஷ்குமார் என்பவரை போலீசார் கைது செய்தனர். இந்தநிலையில், மதுரை மாநகராட்சி வரி முறைகேடு விவகாரத்தில் மேயர் இந்திராணியின் கணவர் பொன்வசந்த் கைது செய்யப்பட்டார்.

சென்னையில் கைது செய்யப்பட்ட அவரை மதுரைக்கு அழைத்துச் சென்று விசாரிக்க போலீசார் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த வழக்கில் ஏற்கனவே 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 'தம்பியால் என்னை ஒதுக்கி வைத்துவிட்டாய்' மனைவிக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு தொழிலாளி தற்கொலை



சென்னை, ஆக. 13

சென்னை திருவொற்றியூர் பெரியார் நகர் பகுதியைச் சேர்ந்தவர் வெங்கடேஷ் (வயது 28). கட்டிடத்தொழிலாளியான இவர், 10 வருடங்களுக்கு முன்பு அனுசியா என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

அனுசியாவின் தம்பியின் நண்பரான முகேஷ், மனைவியை பிரிந்து கடந்த 3 மாதங்களாக அனுசியாவின் வீட்டில் தங்கி உள்ளார். அவரையும் தனது தம்பி என்றே அனுசியா அழைத்து வந்துள்ளதாக தெரிகிறது. இது தொடர்பாக கணவன்மனைவி இடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்தநிலையில் முகேஷ், அனுசியா மற்றும் அவரது 2 குழந்தைகளையும் திருவொற்றியூர் தேரடி பகுதியில் உள்ள துணிக்கடைக்கு அழைத்துச்சென்று துணி வாங்கி கொடுத்ததாக தெரிகிறது. இதனால் விரக்தி அடைந்த வெங்கடேஷ், தனது வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுபற்றி திருவொற்றியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர்.

தற்கொலைக்கு முன்பாக வெங்கடேஷ் தனது மனைவிக்கு எழுதிய கடிதம் போலீசாரிடம் சிக்கியது. அந்த கடிதத்தில், "தம்பி, தம்பி என்று சொல்லி என்னை ஒதுக்கி வைத்து விட்டாய். என் சாவுக்கு காரணம் முகேஷ்" என எழுதி இருந்ததாக போலீசார் தெரிவித்தனர். இதுதொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# அத்திக்கடவுஅவினாசி திட்டத்தை திமுக அரசு சரிவர செயல்படுத்தாவிட்டால்: நயினார் நாகேந்திரன் எச்சரிக்கை



சென்னை , ஆக. 14

தமிழக பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன்வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

அரை நூற்றாண்டுகால கனவுத் திட்டமான அத்திக்கடவுஅவினாசி திட்டத்தை ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகளாக கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு, தொடர் போராட்டத்தின் விளைவாக ஓராண்டுக்கு முன்பு பெயருக்கு செயல்படுத்தி விட்டு, பின்பு அதிலும் பல குளறுபடிகளை உட்புகுத்தியிருக்கிறது திராவிட மாடல் அரசு.

முந்தைய அதிமுக ஆட்சியிலேயே அத்திக்கடவுஅவினாசி திட்டத்தில் பெரும்பான்மையான பணிகள் நிறைவுற்ற நிலையில், மீதமுள்ள பணிகளை சரியாக செயல்படுத்தாது இத்திட்டத்தில் திமுக அரசு அடைசியம் காட்டி வருகிறது.

திட்டம் செயல்பாட்டுக்கு வந்து ஓராண்டு ஆன பின்பும், இன்னும் பெருவாரியான குளம் குட்டைகளில் நீர் நிரப்பப்படவில்லை என்பது திமுக அரசின் நிர்வாகத் திறனின்மையையே காட்டுகிறது. திட்டத்தில் விடுபட்டுள்ள 1,400 குளம் குட்டைகளையும் இரண்டாம் கட்டமாக இணைக்க வேண்டும் என்ற மக்கள் கோரிக்கையையும் கண்டுகொள்ளாதிருப்பது இத்திட்டத்தில் திமுக அரசுக்கு துளியும் அக்கறையில்லை என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறது.

முன்னெடுத்தால் பல்வேறு கட்டப் போராட்டம் நடத்தப்படும் என தமிழக பாஜக அறிவித்ததாலேயே திமுக அரசு திட்டத்தைத் தொடவைத்தது என்பது உலகறிந்த உண்மை. இன்னும் எத்தனை போராட்டங்களை அத்திக்கடவுஅவினாசி திட்டத்தின் முக்கியத்துவம் விடியா அரசின் விழிகளுக்குப் புலப்படும்? போராடினால் மட்டும் தான் திராவிட மாடல் அரசு தனது கடமையை முறையாகச் செய்ய முன்வருமா?

திமுக அரசின் ஆட்சி முடிவதற்கு இன்னும் 7 மாதங்கள் மட்டுமே உள்ள நிலையில், இன்னும் பத்து நாட்களுக்குள் அத்திக்கடவு அவினாசித் திட்டம் சரிவர செயல்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், முன்னாள் மாநிலத் தலைவரும் சகோதரருமான அண்ணாமலை அவர்கள் அறிவித்தபடி தமிழக பாஜக சார்பாக பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.


இனிமேலும் காலந்தாழ்த்தி கொங்கு மண்டல மக்களை வதைக்காது அத்திக்கடவுஅவினாசி திட்டத்தில் தமிழக பாஜகவின் தீவிர நிலைப்பாட்டை கவனத்தில் கொண்டு உடனடியாக இத்திட்டத்தை சரிவர செயல்படுத்த வேண்டும் என இறுதிகட்ட எச்சரிக்கையாக திமுக அரசை வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார் .

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
14.8.2025

# பாம்பன் தூக்குப்பாலத்தில் திடீர் கோளாறு... ரெயில்கள் தாமதம்

ராமேசுவரம், ஆக. 14

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே உள்ள புதிய ரெயில் பாலம் ரூ.545 கோடியில் கட்டப்பட்டதாகும். பாலத்தின் மையப்பகுதியில் கப்பல் கடப்பதற்காக மேல் நோக்கி திறந்து மூடும் வகையில் தூக்குப்பாலம் உள்ளது. புதிய ரெயில் பாலம் பயன்பாட்டுக்கு வந்த நிலையிலும் மையப் பகுதியில் உள்ள தூக்குப்பாலத்தை திறந்து மூடுவதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது. இதை ஆய்வு செய்வதற்காக நேற்று பிற்பகலில் தூக்குப்பாலம் திறக்கப்பட்டது. அப்போது தூக்குப்பாலத்தை கீழே இறக்க முயன்றபோது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு பாலம் முழுமையாக இறங்காமல் பாதியிலேயே நின்றது.



இதற்கிடையே ராமேசுவரத்தில் இருந்து நேற்று பிற்பகல் 2.40 மணிக்கு மதுரைக்கு புறப்பட்ட பயணிகள் ரெயிலானது அக்காள்மடம் ரெயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மாலை 5 மணிக்கு தூக்குப்பாலம் முழுமையாக கீழே இறக்கப்பட்டாலும் தூக்குப்பாலம் தண்டவாளத்தோடு சரியாக இணையாததால் ரெயில்கள் கடந்து செல்ல அனுமதி வழங்கவில்லை. இதனால் மாலை 4 மணிக்கு ராமேசுவரத்தில் இருந்து புறப்படும் தாம்பரம் ரெயிலும் அக்காள்மடம் ரெயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. 5 மணிக்கு புறப்படும் சென்னை எக்ஸ்பிரஸ் ரெயிலும் ராமேசுவரம் ரெயில் நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டது.

மாலை 6.30 மணிக்கு பிறகு தூக்குப்பாலம் இணைப்பு தண்டவாளத்துடன் முழுமையாக இணைக்கப்பட்டது. தொடர்ந்து இரவு 7 மணி அளவில் ராமேசுவரத்தில் இருந்து என்ஜின் மட்டும் கொண்டு வரப்பட்டு, தூக்குப்பாலத்தில் மிக மெதுவாக இயக்கி சோதனை நடத்தப்பட்டது. தொடர்ந்து அதே என்ஜின் மீண்டும் ராமேசுவரம் நோக்கி வந்தது. இதன் பின்னர் தாம்பரம் ரெயிலானது 4 மணி நேரம் தாமதமாக பயணிகளுடன் இரவு 8 மணிக்கு பாம்பன் ரெயில் பாலம் வழியாக தூக்குப்பாலத்தை கடந்து மெதுவாக சென்றது.

தொடர்ந்து 5 மணிக்கு புறப்படும் சென்னை எக்ஸ்பிரஸ் ரெயில் 8.10 மணிக்கு தூக்குப்பாலத்தை கடந்து சென்றது. வழக்கம்போல் 8.45 மணிக்கு புறப்படும் சேது எக்ஸ்பிரஸ் ரெயில் 10 நிமிடம் தாமதமாக புறப்பட்டு சென்றது. ரெயில்கள் தாமதமாக சென்றதால் பயணிகள் மிகுந்த அவதி அடைந்தனர். மதுரை ரெயிலுக்கான பயணிகள், சென்னை ரெயில்களில் மாறிக்கொண்டதால், அந்த ரெயில் அங்கிருந்து கிளம்பவில்லை.

பாம்பன் புதிய ரெயில் பாலம் திறக்கப்பட்டு 4 மாதங்கள் ஆன நிலையில் மையப்பகுதியில் உள்ள தூக்குப்பாலத்தை திறந்து மூடுவதில் தொடர்ந்து தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு வருகிறது. இனி கோளாறு ஏற்படாதவாறு செயல்பட வைக்க தக்க நடவடிக்கையை ரெயில்வே நிர்வாகம் எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# ஓடும் ரெயிலில் பெண்ணிடம் 10 பவுன் நகை திருட்டு

நெல்லை, ஆக. 14

மும்பையில் ஏராளமான தமிழர்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் சொந்த ஊருக்கு ரெயில்களில் பயணம் செய்து வந்து செல்கிறார்கள். இந்த நிலையில் தூத்துக்குடி மாவட்டம் பேய்க்குளம் பகுதியை சேர்ந்த பெண் நேற்று முன்தினம் நெல்லையில் இருந்து மராட்டிய மாநிலம் வழியாக ஜாம்நகர் செல்லும் ரெயிலில் பயணம் செய்தார். இந்த ரெயில் அன்று நள்ளிரவு மங்களூரு உடுப்பி இடையே சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த பெண்ணின் பையில் வைக்கப்பட்டிருந்த 10 பவுன் நகை மர்ம நபர்கள் திருடிச்சென்று விட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண் ரெயிலில் இருந்த டிக்கெட் பரிசோதகர், போலீசாரிடம் தகவல் தெரிவித்தார். பின்னர் அவர் ரெயில்வே போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

உடுப்பி மங்களூரு இடையே பயணிக்கும் தமிழ் பயணிகளிடம் இது போன்ற திருட்டு சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பலர் புகார் அளிக்காமல் சென்று விடுகிறார்கள். எனவே இந்த தொடர் திருட்டை தடுக்கும் வகையில் ரெயில்வே பாதுகாப்பு படை, ரெயில்வே போலீசார் பெட்டிகளில் பயணிகளுக்கான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று ரெயில் பயணிகள் வலியுறுத்தி உள்ளனர்.

# தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தகவல்



ஈரோடு, ஆக. 14

ஈரோடு மாவட்டம் கோபியில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி தொடங்கி வைத்த தகவல் தொழில்நுட்ப அணி தமிழகம் முழுவதும் தி.மு.க.வின் கொள்கை, கோட்பாடுகளை, மக்களுக்கு கொண்டு சேர்த்து வருகிறது. தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முயற்சியின் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் ரூ.10 லட்சத்து 32 ஆயிரம் கோடி முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு ஈர்க்கப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் போதிய இடவசதி கிடைத்தால் சுற்றுச்சூழல் பாதிக்காத அளவில் தகவல் தொழில்நுட்ப பூங்கா கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவை விமான நிலையத்தில் ரூ. 7 கோடி மதிப்புள்ள ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல்

கோயம்புத்தூர் ஆக. 14

கோவைசர்வதேசவிமானநிலையத்தில் வெளிநாடுகளில் இருந்து ஹைட்ரோபோனிக் கஞ்சா என்ற உயர் ரக கஞ்சா கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.



இந்த தகவலை தொடர்ந்து பயணிகளிடம் தீவிர சோதனை நடைபெற்றது. அப்போது, சிங்கப்பூரில் இருந்து இன்று கோவை வந்த விமானத்தில் பயணித்த பயணிகளை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, பயணிகள் 2 பேர் ஹைட்ரோபோனிக் கஞ்சாவை கடத்தி வந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, பயணிகளிடமிருந்து சுமார் 7 கிலோ எடையுள்ள ஹைட்ரோபோனிக் கஞ்சாவை பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு ரூ. 7 கோடி என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட பயணிகளிடம் நடத்தப்பட்ட விசாரணையில் இருவரும் கேரளாவை சேர்ந்த முஜீப், சுகைல் உயபத்துல்லா என்பது தெரியவந்தது. கஞ்சா கடத்தி வந்த 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (14.8.2025)

மேஷம்: முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு உயரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

ரிஷபம்: புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.

மிதுனம்: நண்மனதில் இருந்த கவலை அகலும். உடல் நலம் மேம்படும். உறவினர்களுடன் நேரம் செலவிடுவீர்கள்.

கடகம்: புதிய திட்டங்கள் தொடங்க உகந்த நாள். வீடு, வாகன தொடர்பான முயற்சிகளில் நல்ல விளைவு.

சிம்மம்: சில விஷயங்களில் பொறுமை அவசியம். தேவையற்ற செலவுகளை தவிர்க்கவும். உடல் நலத்தில் கவனம் தேவை.

கன்னி: உழைப்புக்கு மதிப்பு கிடைக்கும். பணியில் பதவி உயர்வுவாய்ப்பு. மனநிறைவு தரும் நாள்.

துலாம்: புதிய நண்பர்கள் சேருவர். உறவுகளில் ஒற்றுமை நிலவும். பொருளாதார நிலை உயரும்..

விருச்சிகம்: சிந்தனையில் தெளிவு வரும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பயணம் பயனளிக்கும்.

தனுசு: கல்வியில் சிறப்பு பெறுவீர்கள். வேலை தொடர்பான புதிய வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

மகரம்: பணிகளில் விரைந்து முடிவு எடுப்பது நல்லது. வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

கும்பம்: பழைய நண்பர்களிடமிருந்து உதவி கிடைக்கும். முதலீடுகளில் லாபம் அதிகரிக்கும். சுகநிலை சிறப்பாகும்.

மீனம்: குடும்பத்தில் நல்ல நிகழ்வுகள் நடக்கும். மனதில் உற்சாகம் கூடும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

# குன்றத்தூரில் நண்பரைக் கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை: கோர்ட்டு தீர்ப்பு

காஞ்சிபுரம், ஆக. 14




குன்றத்தூரில் மது போதையில் நண்பரை கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனையும் ரூ.1,000 அபராதமும் விதித்து காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் நாகேசுவரன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் வெல்டிங்சங்கர்(46) அதே குன்றத்தூர் பகுதியில் துரைசாமி முதலியார் தெருவைச் சேர்ந்தவர் கார்த்திக்(40) இருவரும் நண்பர்களாக பழகி வந்த நிலையில் மேலும் சில நண்பர்களுடன் சேர்ந்து கடந்த 2017 ஆம் ஆண்டு குன்றத்தூர் பகுதியில் மது அருந்தியுள்ளனர். அப்போது கார்த்திக்கிற்கும், வெல்டிங் சங்கருக்கும் மதுபோதையில் தகராறு ஏற்பட்டத்தில் வெல்டிங் சங்கர் நண்பன் கார்த்திக்கை குப்பையில் கிடந்த டியூப்லைட்டால் தாக்கியதில் அவர் பலத்த காயம் அடைந்து அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக குன்றத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து வெல்டிங் சங்கரை கைது செய்திருந்தனர். இவ்வழக்கு காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

வழக்கு தொடர்பாக அரசு வழக்குரைஞர் கார்த்திகேயன் 10க்கும் மேற்பட்ட சாட்சியங்களிடம் விசாரணை மேற்கொண்டு வெல்டிங் சங்கர் மீதான குற்றச்சாட்டினை தகுந்த ஆதாரங்களுடன் நிருபித்துள்ளார். வழக்கினை விசாரித்த மாவட்ட முதன்மைநீதிபதி ப.உ.செம்மல் குற்றவாளி வெல்டிங் சங்கருக்கு ஆயுள் தண்டனையும், ரூ.1,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

# பாக்ஸ் ஆபீஸில் புயலை கிளப்பிய பின்...ஓடிடியில் மனதை கவர வரும் "சயாரா"...




கடந்த மாதம் 18ம் தேதி திரையரங்குகளில் வெளியான மோஹித் சூரியின் "சயாரா" திரைப்படம் தற்போது ஓடிடியில் வெளியாக தயாராகி இருக்கிறது.

அதன்படி, இப்படம் செப்டம்பர் மாதம் 12ம் தேதி நெட்பிளிக்ஸில் வெளியாக உள்ளதுபோல் தெரிகிறது. யாஷ் ராஜ் பிலிம்ஸ் இன்னும் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை என்றாலும், படத்தின் காஸ்டிங் இயக்குனர் ஷானூ சர்மாவால் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில், செப்டம்பர் மாதம் 12ம் தேதி நெட்பிளிக்ஸில் சயாரா வெளியாகும் என்று தெரிவித்திருக்கிறார்.

தயாரிப்பாளர்களும் இதனை விரைவில் உறுதிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அஹான் பாண்டே மற்றும் அனீத் பத்தா நடித்த இந்த காதல் நாடகம், பாக்ஸ் ஆபீஸில் பட்டையை கிளப்பிள்ளது. இன்னும் திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் இத்திரைப்படம் இதுவரை இந்தியாவில் ரூ. 319.85 கோடியும் உலகளவில் ரூ. 500 கோடிக்கு மேலும் வசூலித்திருக்கிறது.

# யூடியூப் பிரபலம் திவாகர் மீது நடிகை ஷகிலா புகார்



"வாட்டர்மெலன்ஸ்டார்" என்று அழைக்கப்படும் திவாகர், ரீல்ஸ் மூலம் பிரபலமானவர், நடிகர் சூர்யா கஜினி திரைப்படத்தில் வாட்டர் மெலனை கேரக்டரை வைத்துக்கொண்டு ஸ்டைலாக நடித்த காட்சியை திவாகர் ரீ கிரியேட் செய்தார். இந்த காட்சி மூலம் அவர் பிரபலமடைந்தார். தன்னை தானே "வாட்டர்மெலன்ஸ்டார்" என அழைத்து கொண்டு வருகிறார். இந்த நிலையில் தனது பேச்சுக்கள் மற்றும் செயல்களால் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளார்.

சமீபத்தில் நடிகர் சூரி சிறிய வேடங்களில் நடித்து, பெயிண்ட் வேலை செய்தவர் என்றும், தான் படித்தவர் என்பதால் அப்படி செய்ய மாட்டேன் என்றும் கூறினார். எனக்கு மிகபெரிய வேடங்கள் தான் வேண்டும் என பேட்டி கொடுத்திருந்தார். மேலும் தன்னை பார்த்து தான் வாட்டர் மெலன் காட்சியை மீண்டும் ரி கிரியேட் செய்ததாகவும் பேசிவந்தார்.

இந்தநிலையில், பிரபல நடிகை ஷகிலா "வாட்டர்மெலன்ஸ்டார்" என்று அழைக்கப்படும் திவாகர் மீது போலீசில் பரபரப்பு புகார் கொடுத்துள்ளார். சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கொடுத்துள்ள புகாரில், கடந்த சில தினங்களாக "வாட்டர் மெலன் ஸ்டார்" என்று சொல்லிக் கொண்டு யுடியூப் சேனலில் பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கும் திவாகர் என்பவர்

தனது யூட்யூப் சேனல் பேட்டியில், ஜி.பி.முத்துவின் சமூகத்தை குறிப்பிட்டு அவரைப் பற்றி பேச மறுத்ததோடு, நெல்லை படுகொலையை தனது சமூகத்தை குறிப்பிட்டு நியாயப்படுத்தும் வகையில் பேசி உள்ளார்.

திவாகரின் பேட்டிகள் சமூக நல்லிணக்கத்தை கெடுக்கும் வகையில் உள்ளதாகவும், இது எஸ்சி/எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமாக கருதப்பட வேண்டும். திவாகர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புகார், சமூக ஊடகங்களில் திவாகரின் பேச்சு குறித்து பரவலான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜி.பி.முத்து, யூட்யூப் மூலம் பிரபலமானவர், மேலும் அவரது சமூகத்தை குறிப்பிடுவது சமூக பதற்றத்தை உருவாக்குவதாக கருதப்படுகிறது. திவாகரின் பேட்டிகள், சமூக நல்லிணக்கத்திற்கு எதிராக உள்ளதாக கருதி, ஷகிலா இந்த புகாரை பதிவு செய்துள்ளார்.

# "தமிழ்நாட்டுக்கு ரஜினிகாந்த்"...வைரலாகும் "பரம் சுந்தரி" பட டிரெய்லர்



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஜான்வி கபூரின் 'பரம் சுந்தரி' படத்தின் டிரெய்லர் வெளியாகி இருக்கிறது.

சித்தார்த் மல்ஹோத்ரா கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படம், பஞ்சாபை சேர்ந்த ஒரு ஆணுக்கும் தென்னிந்திய பெண்ணுக்கும் இடையிலான காதலை மையமாக கொண்டுள்ளது.

தினேஷ் விஜனின் மோடாக் பிலிம்ஸ் தயாரித்திருக்கும் இப்படத்தில் சுந்தரி என்ற கதாபாத்திரத்தில் ஜான்வி கபூரும் பரம் என்ற கதாபாத்திரத்தில் சித்தார்த்தும் நடித்துள்ளனர்.

'தேவரா' திரைப்படத்தில் ரசிகர்களை கவர்ந்திருந்த ஜான்வி கபூர் தற்பொழுது மீண்டும் தென்னிந்திய பெண்ணாக நடித்துள்ளதால் ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இப்படம் வருகிற 29ம் தேதி வெளியாக உள்ளநிலையில், தற்போது டிரெய்லர் வெளியாகி உள்ளது. இதில் ஜான்வி கபூர் மலையாளத்திற்கு மோகன்லால், தமிழ்நாட்டுக்கு ரஜினிகாந்த் என்று கூறும் வசனம் கவனத்தை ஈர்த்துள்ளது.

# ஆசிய கோப்பை கிரிக்கெட்: இந்திய அணியில் ஜிதேஷ் சர்மா ?



8 அணிகள் இடையிலான 17வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9ந்தேதி முதல் 28ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும். இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10ந் தேதி துபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14ந் தேதி துபாயிலும், ஓமனை செப்.19ந் தேதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி செப்.28ந் தேதி துபாயில் அரங்கேறுகிறது. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணியில் யாரெல்லாம் இடம்பெற போகிறார்கள்? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி 19 அல்லது 20ம் தேதிகளில் அறிவிக்கப்பட உள்ளது .

இந்த நிலையில் ஆசிய கோப்பை தொடருக்கான இந்திய அணியில் ஜிதேஷ் சர்மா இடம் பெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விக்கெட் கீப்பர் பேட்மேன்ஸ்மேனான ஜிதேஷ் சர்மா கடந்த ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை: பெங்களூருவில் நடைபெற இருந்த போட்டிகள் மாற்றம்.. வெளியான தகவல்



13வது மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (செப்டம்பர்) 30ந்தேதி முதல் நவம்பர் 2ந்தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடக்கிறது. இந்தியாவில் மகளிர் உலகக்கோப்பை அரங்கேறுவது இது 4வது முறையாகும்.

இதில் இந்தியா, நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, வங்காளதேசம் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் டாப்4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும்.

இந்தியா மற்றும் இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மொத்தம் 31 ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்தியாவில் பெங்களூரு, கவுகாத்தி, விசாகப்பட்டினம் மற்றும் இந்தூரில் போட்டிகள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டன. பாதுகாப்பு பிரச்சினை காரணமாக பாகிஸ்தான் அணிக்குரிய அனைத்து ஆட்டங்களும் இலங்கையில் இடம் பெறுகின்றன. இந்நிலையில் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெற இருந்த இந்த தொடரின் போட்டிகள் அனைத்தும் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த மைதானத்தில் போட்டியை நடத்த காவல்துறையின் அனுமதியை பெற கர்நாடக கிரிக்கெட் சங்கத்திற்கு பி.சி.சி.ஐ. விதித்த காலக்கெடு கடந்த 10ம் தேதியுடன் முடிவடைந்தது. இதன் காரணமாக சின்னசாமி மைதானம் மகளிர் உலகக்கோப்பை போட்டிகளை நடத்தும் வாய்ப்பை இழக்கும் அபாயத்தில் உள்ளது.

இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மாற்றாக திருவனந்தபுரத்தை பி.சி.சி.ஐ. தேர்வு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: ரைபகினா 4வது சுற்றுக்கு முன்னேற்றம்

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் ரைபகினா (கஜகஸ்தான்) எலிஸ் மெர்டென்ஸ் (பெல்ஜியம்) மோதினர்.

இதில் முதல் செட்டை எலிஸ் மெர்டென்ஸ் கைப்பற்றிய நிலையில், 2 மற்றும் 3வது செட்டை ரைபகினா கைப்பற்றினார். ரைபகினா இந்த ஆட்டத்தில் 46, 63 மற்றும் 75 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

இவர் 4வது சுற்றில் மேடிசன் கீஸ் உடன் மோத உள்ளார்.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.